**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இருப்பு), திருவில்லிபுத்தூர்.**
**முன்னிலை :- திரு. T.V.மணி, B.A., LL.B.,**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**
**2026** ம் ஆண்டு **பிப்ரவரி** திங்கள் **16** ஆம் நாள் **திங்கள்கிழமை**

**IA.15/2026 in OS. No.12/2017**

1) V.பரமானந்தம்(இறந்துவிட்டார்)
2) K.பேயாண்டி
3) N.S.பாலமுருகன் ... 2, 3 மனுதாரர்கள்/2, 3 பிரதிவாதிகள்
(தலைவர்.பாணர் குல தையல்காரர்கள் சங்கம்,
பதிவு எண்.66/2007, திருக்குமரன்நகர், திருநகர், மதுரை-06)

/எதிர்/

(தொண்டைமான், செம்மான், சேர்வை, பாணர்
ஆகிய நான்கு ஜாதிகள் பிரதிநிதி)
1) S.முத்துக்குமார்
2) T.மனோகரன்
3) K.குருவராஜ்
4) அருள்மிகு ஸ்ரீ கம்பகாமாட்சியம்மன்
ஸ்ரீ காத்தவராயன் வழிபடுவர்கள் சங்கம்
அதன் செயலாளர் ... எதிர்மனுதார்கள்/வாதிகள்

இம்மனுவானது என் முன்பாக 09.02.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.S.இராஜகுரு** அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் **திரு.J.சுரேஷ்குமார்** அவர்கள் ஆஜராகியும், மனுஉரை, எதிர்உரை, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பும் கேட்கப்பட்டும், இன்று இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

31.8.2010 ஆம் தேதி V.பரமானந்தம் கொடுத்த புகார் மனு ஏற்பு சான்றிதழ், புகார் மனு, எதிர்மனுதாரர்கள்/வாதிகள் எழுதிக் கொடுத்துள்ள வாக்குமூலம் மேற்படி ஆலங்குளம் காவல் நிலையத்தில் உள்ள ஆவணங்களை வரவழைத்து புகார் மனு ஏற்பு சான்றிதழ் புகார் மனு எதிர்மனுதாரர்கள், பிரதிவாதிகள் எழுதிக் கொடுத்துள்ள

வாக்குமூலம் மேற்படி ஆவணங்களை சான்றிட்ட நகல்களாக குறியீடு செய்ய ஆலங்குளம் காவல் நிலையஆய்வாளர் சாட்சியம் அளிக்க உத்தரவு செய்ய கோரி கட்டளை 75, 76 CRP கீழ் மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

– – – – –

**2) மனுவின் சுருக்கம்**

இந்த மனுதாரர், மனுதார்/3ம் பிரதிவாதி ஆவார். மனுதார் தரப்பு பி.வா.சான்று மனுதாரர் தரப்பு ஆவணமாக 31.08.2010 தேதியிட்ட ஆலங்குளம் காவல் நிலைய புகார் மனு ஏற்பு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. மேற்படிச் சான்றிதழ் மனுதார் தரப்பில் 30 ஆவது குறியீடு செய்யப்பட்டுள்ளது. குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணத்தில் ஆலங்குளம் காவல் நிலையத்தில் வாதி தரப்பு எழுதிக் கொடுத்துள்ள வாக்குமூலம் மற்றும் பிரதிவாதி தரப்பில் கொடுக்கப்பட்ட புகார் மனுவும் இந்த வழக்கில் முக்கியமான ஆவணங்கள் ஆகும். மேற்படி ஆவணங்கள் சமூக நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும் பட்சத்தில் உண்மையை மனுதார்/பிரதிவாதி தரப்பில் எடுத்துரைக்க இயலும். எனவே ஆலங்குளம் காவல் நிலையத்தில் உள்ள ஆவணங்கள் 31.08.2010 புகார் மனு ஏற்புச் சான்றிதழ் மற்றும் புகார் மனு அதில் ஆஜராகி கொடுத்த வாக்குமூலங்கள் நீதிமன்றத்திற்கு வரவழைத்து மேற்படி ஆவணங்கள் சம்பந்தமாக சாட்சியம் அளிக்க அனுமதி வழங்க வேண்டியது அவசியமாயும் நியாயமாயும் ஆகும். இம்மனுவை அனுமதிக்காதபட்சத்தில் மனுதார்ருக்கு ஏராளமான கஷ்ட, நஷ்டங்கள் ஏற்படக்கூடியதாய் உள்ளது. இதனால் மனுதாரருக்கு சொல்ல முடியாத துயரங்கள் ஏற்பட்டு, வழக்கில் பாதகம் ஏற்படும் சூழ்நிலை இருந்து வருகிறது. இம்மனுவை அனுமதிப்பதனால் எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு எவ்வித ஆட்சேபனையும் இருக்க முடியாது. எனவே இம்மனு தாக்கல்.

3) **எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரையின் சுருக்கம்**

தாவா மனுவில் எதிர்மனுதாரர்கள் மனுவில் விவரிக்கப்பட்டுள்ள ஆவணங்களை வரவழைக்கவும், மனுவில் விவரிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் குறித்து சாட்சியமளிக்க ஆலங்குளம் காவல் நிலைய காவல் ஆய்வாளரை விசாரிக்கவும் கோரிய விண்ணப்பத்திற்கு ஆதரவாக தாக்கல் செய்யப்பட்ட பிரமாணப் பத்திரத்தில் கூறப்பட்டுள்ள அனைத்து குற்றச்சாட்டுகளையும் இதன் மூலம் மறுக்கப்படுகிறது. அருள்மிகு ஸ்ரீ கம்பகாமாட்சியம்மன் காத்தவராயன் திருக்கோவிலை குலதெய்வமாக வழிபடுவோர் சங்கத்தின் பிரதிநிதியாகவும், தொண்டைமான், செம்மன், சேர்வை மற்றும் பாணர் ஆகியோரின் பிரதிநிதிகளாகவும் மேற்கண்ட வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றும் வழக்கில் உள்ள பிரார்த்தனை, கோயில் வாதியாகக் கருதப்படும் 4 சமூக மக்களுக்குச் சொந்தமானது என்பதைக் குறிக்கிறது. இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, 04.08.2025 அன்று எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து மனுதாரர்கள் தங்கள் சாட்சியங்களை முடிக்க நேரம் எடுத்துக்கொள்கிறார்கள். இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப்

பார்த்தால், மனுதாரர்கள் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவைப் பின்பற்ற விரும்பவில்லை என்பது உறுதியாகத் தெரிகிறது. மனுதாரர்கள் இதுவரை இந்த மாண்புமிகு நீதிமன்றத்தின் முன் அளித்துள்ள சாட்சியங்களைப் படிப்பது, மனுதாரர்களின் வாதங்கள் முற்றிலும் எரிச்சலூட்டுவதாக இருப்பதை நிறுவும். அவர்கள் எந்த காரணமோ அல்லது வாசகமோ இல்லாமல் வழக்கை இழுத்தடிக்கிறார்கள். சட்டத்தில் ஏற்றுக்கொள்ள முடியாத ஆதாரங்களைச் சேர்க்கக் கோரும் தற்போதைய இடைநிலை மனு, வழக்கின் நடவடிக்கைகளை நீடிக்க மனுதாரர்கள் மேற்கொண்ட மற்றொரு முயற்சி என்று பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது. வரவழைக்கப்பட விரும்பும் ஆவணங்கள் சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கவை அல்ல, பொருத்தமற்றவை. இந்த இடைநிலை மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும்.

4) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

5) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,

(1) இம்மனு அனுமதிக்கக் கூடியதா?

(2) மனுதாரருக்கு கிடைக்கக் கூடிய இதர பரிகாரம் என்ன?

6) **தீர்வு**

(6–i) அசல் வழக்குரை, சீர்திருத்தம் செய்யப்பட்ட வழக்குரை, எதிர்வழக்குரை ஆகியவைகளையும், இம்மனுவுடன், எதிர்உரையும் சேர்த்து வாசித்துக்கொள்ளப்படுகின்றது. அசல் வழக்கில் இந்த எதிர்மனுதாரர்கள்/வாதிகள் கோரியுள்ள பரிகாரத்தை முற்றிலுமாக ஆட்சேபித்து மனுதாரர்கள்/பிரதிவாதிகள் எதிர்வழக்குரையையும் தாக்கல் செய்துள்ளார்கள். 2017 ம் ஆண்டு முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கு, எதிர்வழக்குரையும் தாக்கல் செய்யப்பட்டிருந்து கடந்த 05.09.2018 ஆம் தேதியில் எழுவினாக்களும் வனையப்பட்டுள்ளது. இந்நீதிமன்றத்திற்கு மாறுதலாகி கடந்த 22.11.2018 ஆம் தேதி முதல் இந்நீதிமன்ற நடவடிக்கையில் இருந்து வந்துள்ள பொழுதும் பல இடை மனுக்கள் உபயதரப்பால் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்த பொழுது, அசல் வழக்கில் இருந்த 1 ம் எதிர்வாதி இறந்து போய்விடவே, வாரிசு சேர்ப்பு நடவடிக்கைக்காக வேண்டி கடந்த 03.02.2020 ஆம் தேதி முதல் நிலுவையில் இருந்து வந்தும், இ.ம.எண்.2/2020 யை 22.11.2023 ஆம் தேதியில் அனுமதிக்கப்பட்டும், பிராதை

சீர்திருத்தம் செய்து கொள்ளப்பட வேண்டி வழக்கானது நிலுவையில் இருந்த பொழுது, இ.ம.எண்கள்.43/2018, 4/2023, 5/2023 ஆகியவைகளும் விசாரணையில் நிலுவையில் இருந்து வந்தும் இ.ம.எண்.4/2023 மற்றும் 5/2023 ஆனது 06.01.2024 அன்று தள்ளுபடியாகியும், இ.ம.எண்.43/2018 ஆனது தொடர்ந்து விசாரணையில் 23.10.2024 வரையிலும் நிலுவையில் இருந்து வந்தும், சிவகாசி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கலாகி இருந்த அசல் வழக்கானது மாண்புமிகு சென்னை, உயர்நீதிமன்ற மதுரை கிளை, உத்தரவு படி இந்நீதிமன்றத்திற்கு மாறுதலாகி, பின்பு மாவட்ட முதன்மை நீதிமன்றத்திற்கு புதிய அசல் வழக்கு எண் கொடுபட வேண்டி கடிதம் 25.10.2024 கடிதம் சமர்பிக்கப்பட்டும், உத்தரவிற்காக, 05.11.2024, 12.11.2024, 14.11.2024 என்று இருந்து அ.வ.எண்.324/2024 ஆக புதிய எண் வழங்கப்பட்டு, தொடர்ந்து இ.ம.எண்.43/2018, 7/2024 மனுக்களுக்காக விசாரணையில் இருந்து வந்தும் இ.ம.எண்.7/2024 ஆனதை 06.01.2025 ஆம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டும் இ.ம.எண்.43/2018 ஆனது விசாரணையில் இருந்து வந்தும், மேற்காணும் மனுவை விலியுறுத்தவில்லை என்று சொல்லி 10.01.2025 ஆம் தேதியில் சொல்லி 10.01.2025 ஆம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டும் இ.ம.எண்.1/2024 தொடர்ந்து நிலுவையில் இருந்து வந்தும் மேற்படி மனுவும் 23.01.2025 ம் தேதியில் தள்ளுபடியானது.

(6–ii) அசல் வழக்கானது 27.01.2025 ஆம் தேதிய விசாரணைக்கு வந்த சமயத்தில் இ.ம.எண்.10/2025 ஆனதை 06.02.2025 ஆம் தேதியில் அனுமதிக்கப்பட்டு, பிராதை சீர்திருத்தம் செய்து கொள்ளப்பட்டு, எதிர்வாதிகள் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை இல்லை என்று எடுத்துரைக்கப்பட்டு உள்ளது. கடந்த 14.02.2025 ஆம் தேதியில் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், வழக்கு விசாரணையில் பங்கு எடுத்துக்கொள்ளப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டும், தொடர்ந்து வா.சா.1 ஆனவரை முதல் விசாரணை தொடர்ந்து கொள்ள 17.02.2025, 20.02.2025, 25.02.2025 ஆம் தேதிகளில் ஒத்திவைக்கப்பட்டு, வகுமுறை 7 விதி 14(1)ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டும், வகுமுறை 1 விதி 10(2)ன் கீழும், வகுமுறை 6 விதி 17 ன் கீழ் மனு தாக்கல் செய்து கொள்ளப்பட்டும் மேற்படி

இ.ம.எண்.2/2025, 11/2025 மற்றும் 12/2025 ஆக கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டும், தொடர்ந்து 26.03.2025 வரை ஒத்தி வைக்கப்பட்டிருந்து அ.வ.எண்.324/2024 ல் இ.ம.எண்.5/2025 யை தாக்கல் செய்து கொள்ளப்பட்டு, மை இ.ம.எண்.5/2025 யும், 29.04.2025 ஆம் தேதியில் அனுமதிக்கப்பட்டும், பிராதை சீர்திருத்தம் செய்து கொள்ள 04.06.2025, 19.06.2025 க்கு ஒத்தி வைக்கப்பட்டிருந்தது அன்றையதினம் வகுமுறை 6, விதி 17 ன் கீழ் மனு தாக்கலாகி அ.வ.எண்.324/2024 ல் இ.ம.எண்.4/2025 ஆனது தொடர்ந்து 18.07.2025 வரை நிலுவையில் இருந்து வந்தும், 18.07.2025 அன்று, எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், அ.வ.எண்.12/2017 யை விசாரித்துக்கொள்ள வேண்டி குறிப்பறிக்கையை தாக்கல் செய்யப்பட்டது. அதற்கு இம்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணை செய்யாததால், மீண்டும் வா.சா.1 ஆனவரை விசாரித்துக்கொள்ளப்பட்டு, வா.சா.ஆ.9 முதல் வா.சா.ஆ.31 வரையான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டும், வா.சா.1 ஆனவரை குறுக்கு விசாரணை செய்து கொள்ள 21.07.2025, 25.07.2025 தேதிகளுக்கு ஒத்தி வைக்கப்பட்டிருந்து வா.சா.1 ஆனவரை பகுதி வாரியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டு, பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.5 வரை குறியீடு செய்யப்பட்டும், பின்பு 31.07.2025, 01.08.2025 ஆகிய தேதிகளுக்கு ஒத்தி வைக்கப்பட்டும், வா.சா.1 ஆனவரை தொடர்ந்து குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டு பி.சா.ஆ.6 முதல் பி.சா.ஆ.9 வரை குறியீடு செய்யப்பட்டும், தொடர்ந்து கூடுதல் சாட்சிய விசாரணைக்காக 04.08.2025 அன்று ஒத்தி வைக்கப்பட்டு, வா.சா.2 யை விசாரிக்கப்பட்டும், வா.சா.ஆ.32 ஆவணம் குறியீடு செய்யப்பட்டும், அவரை மனுதாரர்கள்/எதிர்வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.

(6–iii) மேலும் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/2, 3 பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியத்திற்காக ஒத்தி வைக்கப்பட்ட பொழுது 11.08.2025 ஆம் தேதியில் 3ம் எதிர்வாதியை பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டும், ஆவணங்களை குறியீடு செய்து கொள்ள 12.08.2025, 14.08.2025 அன்று ஒத்தி வைக்கப்பட்டும், பி.சா.1 ஆனவரை தொடர்ந்து முதல் விசாரணை செய்யப்பட்டு பி.சா.ஆ.10 முதல் பி.சா.ஆ.41 வரையான ஆவணங்கள் குறியிடு செய்யப்பட்டது. பின்பு 22.08.2025 அன்று பி.சா.1 ஆனவரை வாதிகள் தரப்பில்

பகுதி வாரியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டும் வா.சா.ஆ.33ம் குறியீடு செய்யப்பட்டது. மேலும் 26.08.2025 கூடுதலாக பகுதி வாரியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டும் மீண்டும் கூடுதலாக குறுக்கு விசாரணை செய்து கொள்ள 09.09.2025க்கு ஒத்தி வைக்கப்பட்டிருந்து அன்றைய தினம் பகுதி வாரியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டும் மீண்டும் 18.09.2025, 23.09.2025 ஆகிய தேதிகளுக்கு ஒத்தி வைக்கப்பட்டும், கூறுதலாக குறுக்கு விசாரணையும் செய்து கொள்ளப்பட்டு வா.சா.ஆ.34 ஆவணமும் குறியீடு செய்யப்பட்டும் மீண்டும் கூடுதலாக குறுக்கு விசாரணைக்கு வேண்டி 10.10.2025, 17.10.2025, 28.10.2025, 18.11.2025 ஆகிய தேதிகளுக்கு ஒத்தி வைக்கப்பட்டிருந்து 18.11.2025ல் பி.சா.1 ஆனவரை முழுமையாக குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டும், 27.11.2025ஆம் தேதியில், பி.சா.2 விசாரிக்கப்பட்டும், அவர் மூலம் பி.சா.ஆ.42 முதல் பி.சா.ஆ.49 வரையான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டும் பி.சா.2 ஆனவரை குறுக்கு விசாரணை செய்து கொள்ள 04.12.2025, 09.12.2025, 05.12.2025, 05.01.2026, 22.01.2026 ஆகிய தேதிகளுக்கு ஒத்தி வைக்கப்பட்டும், 22.01.2026ஆம் தேதியில் வா.சா.ஆ.35 முதல் வா.சா.ஆ.37 வரையான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டது. கூடுதல் சாட்சிய விசாரணைக்காக 27.01.2026 அன்று ஒத்தி வைக்கப்பட்ட நிலையில், மனுதாரர்கள்/ 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டது.

(6–iv) இம்மனு வாதுரை சமயத்தில், மனு உரையில் சொல்லிய சங்கதிகளை பொறுத்தும், மனுதாரர்கள் தரப்பில் சுட்டிக்காட்டி வாதுரை செய்யப்பட்டது. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் எதிர்உரையில் சொல்லிய சங்கதிகளை சுட்டிக்காட்டி வாதுரை மேற்கொள்ளப்பட்டது. மாண்புமிகு சென்னை, உயர்நீதிமன்றம், மதுரை கிளையும் அசல் வழக்கானதை விரைந்து நடத்தி குறிப்பிட்ட காலத்திற்குள் முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்துள்ளது என்பதும் இரு தரப்பாலும் மறுப்பதற்கு இல்லை. வழக்கு விசாரணையின் பொழுது, இருதரப்பாலும் சாட்சியங்களை விசாரித்துக் கொள்வதற்கும், ஆவணங்களை குறியீடு செய்து கொள்வதுமாக இருந்து வழக்கானது தொடர்ந்து நிலுவையில் இருந்து வருகின்றது. அவ்வப்பொழுது இந்நீதிமன்றமும், வழக்கு நடவடிக்கைகள், நிலுவையில் உள்ளது

பற்றியும் அதற்கான காரணங்களையும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையில் சமர்பித்து, கூடுதல் கால அவகாசமும் பெறப்பட்டு வருகிறது என்பதும் இரு தரப்பாலும் மறுப்பதற்கில்லை. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், வா.சா.1 மற்றும் வா.சா.2 ஆகியோர்கள் விசாரிக்கப்பட்டும், மொத்தத்தில் வாதிகள் தரப்பில் 34 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட நிலையிலும், 2, 3 எதிர்வாதிகள் தரப்பிலும் பி.சா.1 மற்றும் பி.சா.2 விசாரிக்கப்பட்டு மொத்தத்தில் 42 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட நிலையிலும், உபய தரப்பினர்கள் சாட்சிகள் மூலமாகவும், ஆவணங்கள் மூலமாகவும் தங்களது நிலைப்பாட்டை எடுத்துரைக்கும் பொழுது தற்பொழுது மனுதாரர்கள்/ 2, 3 எதிர்வாதிகள் தரப்பில் இம்மனு மூலமாக சொல்லப்படும் காவல் நிலைய புகார் மனு ரசீது, காவல் நிலைய விசாரணை வாக்குமூலம் போன்றவைகளை பொறுத்து, உபய தரப்பினர்களால் மேற்கொள்ளப்படவில்லை என்று எடுத்துரைக்கப்படவில்லை. மேலும் எதிர்மனுதாரர்கள்/வாதிகள், மனுதாரர்கள்/பிரதிவாதிகளும் காவல் நிலைய விசாரணையின் பொழுது வாக்குமூலம் அளித்துள்ளார்கள் என்பதும் ஒப்புக்கொள்ளப்படுகின்றது. எனவே இவ்வழக்கு விசாரணைக்கு மேற்படி காவல் நிலையத்திலிருந்து மேற்படி ஆவணங்களை வரவழைத்து விசாரித்துக் கொள்ள வேண்டும் என்று மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் இம்மனு மூலமாக நடவடிக்கை மேற்கொள்ளும் பொழுது ஷை ஆவணங்கள் சட்டபடி ஏற்புடையதா? இல்லையா? என்பதை பொறுத்து சாட்சிய விசாரணையின் பொழுது தான் தெரிய வரும். ஷை ஆவணங்களை வரவழைத்து சாட்சியம் அளிப்பதால், எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு எவ்வகையில் பாதிப்பு ஏற்படும் என்பதை எடுத்துரைக்கவில்லை. எனவே மனுதாரர்கள்/ எதிர்வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவும் நல்லெண்ணத்தின் பேரில் தாக்கல் செய்யப்பட்டதாக உள்ளது என்றும் இந்நீதிமன்றம் தீர்மானித்தும், அதற்கேற்ப இம்மனுவும் அனுமதிக்கக் கூடியதாக உள்ளது என்றும் இந்நீதிமன்றம் தீர்மானித்து பிரச்சனை எண்கள் 1 மற்றும் 2 க்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.

முடிவில் இம்மனுவை அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. செலவுத் தொகைக்கு உத்தரவு இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2026ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 16ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

T V MANI Digitally signed by T V MANI
Date: 2026.02.16 17:57:31 +0530

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் –** இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணம் –** இல்லை

T V MANI Digitally signed by T V MANI
Date: 2026.02.16 17:57:36 +0530

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**
**IA.15/2026 in OS. No.12/2017**
**உத்தரவு நாள் –16.02.2026**